**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்**
**முன்னிலை:– திருமதி.N. வள்ளியம்மா, B.Sc., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண் 1, மதுராந்தகம்**
**2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ம் நாள் திங்கள்கிழமை**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 414/2026**
**TNCG-17-001006-2026**

| | |
|---|---|
| அரசுக்காக,<br>காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>ஜி1 மதுராந்தகம் காவல் நிலையம்<br>குற்ற எண். 71/2026<br>சட்ட பிரிவு 4(1)(a) TNP Act. | .... குற்றமுறையீட்டாளர் |
| /எதிரிடை/ | |
| பச்சையம்மாள், வயது.62, க/பெ.ரங்கநாதன்,<br>தெற்கு தெரு, மொறப்பாக்கம் கிராமம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம். | .... எதிரி |

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு ROC. No. 814/2020/RG/F1, Dt 07.04.2021

இன் படியான இவ்வழக்கின் விவரங்கள் கீழ்வருமாறு :–

| | |
|---|---|
| Name of the Court | Judicial Magistrate No. I, Madurantakam. |
| Name of the Judge | Tmt.N,Valliamma, B.Sc., B.L., |
| Date of Judgment | 27.07.2026 |
| Case Number along with CNR Number | C.C. 414/2026<br>CNR. No. TNCG-15-001006-2026 |
| Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, G! Maduranthagam PS.<br>**Complainant** |
| | பச்சையம்மாள், வயது.62, க/பெ.ரங்கநாதன்<br>**Accused** |
| Date of Occurrence | 17.02.2026 |
| Date of Complaint | 17.02.2026 |
| Period of Remand | 17.02.2026 |

<table>
<tr><td>Released on Bail</td><td>Released on Bail 24.02.2026</td></tr>
<tr><td>Final Report in the Court</td><td>05.01.2026</td></tr>
<tr><td>Committal/Taken on File</td><td>09.04.2026</td></tr>
<tr><td>Questioning U/s.316 of BNSS</td><td>01.06.2026</td></tr>
<tr><td>Results on Challenge before Superior Courts</td><td>–</td></tr>
<tr><td>Chief Examination</td><td><table>
<tr><th></th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW1</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
<tr><td>PW2</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
<tr><td>PW3</td><td>14.07.2026</td><td>14.07.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>U/s. 351 (1) (b) BNSS</td><td>21.07.2026</td></tr>
<tr><td>Abscondence of an Accused</td><td>–</td></tr>
<tr><td>Grant of Stay</td><td>–</td></tr>
</table>

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 21.07.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பிற்காக குற்றவியல் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.M.நித்யா நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு..B.தினேஷ்பாபு, திரு.S.சரவணன், திரு.K.வினோத்குமார், திரு.G.சீனிவாசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பகரும்

## தீர்ப்புரை

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட ஒரு வழக்கு ஆகும்.

2. கடந்த 17.02.2026ம் தேதி 11.45 மணியவில் மதுராந்தகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மொறப்பாக்கமக் கிராமத்தில் உள்ள எதியின் வீட்டின் அருகே எதிரி

அரசு அனுமதியின்றி 180ML அளவு கொண்ட VORION பிராந்தி பாட்டில்கள்–36 மற்றும் மதுபானம் விற்ற பணம் ரூ.200/– ஐ வைத்திருந்ததாக எதிரி மீது சட்ட பிரிவுகள் 4(1)(a) TNP Act ன் கீழ் தண்டிக்கப்படதக்கவர் என்று மதுராந்தகம் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், வழக்கினை 09.04.2026 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றிருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் BNSS பிரிவு 230 ன் கீழ் குற்றப் பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து BNSS பிரிவு 274 ன் கீழ் எதிரியின் மீது பிரிவு 4(1)(a) TNP Act –ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் குறித்து எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு BNSS பிரிவு 277–ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அ.சா. 1 முதல் 3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ 1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சான்று பொருள்.1 மற்றும் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து BNSS பிரிவு. 351 (1) (b) ன் கீழ் 21.07.2026 ம் தேதியன்று எதிரியிடம் வினவிய போது அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் போதுமான சாட்சியங்களுடன் தகு நிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:-</u>**

7. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா. ஆ. 1 முதல் 4 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சா.பொ.1 மற்றும் 2ன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசுத் தரப்பால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்தார்.

8. அரசு தரப்பில் முருகன் அ.சா.1 ஆகவும், கலையரசி அ.சா.2 ஆகவும், பாலசுப்பிரமணியன் அ.சா.3 ஆகவும் 1 முதல் 3 சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

9. அரசு தரப்பில் கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1ன் 1வது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2ன் 2வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், கைப்பற்றுதல் மசகர் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், அரசு தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் 36 மதுபாட்டில்கள் அ.சா.பொ.1 ஆகவும், மதுபாட்டில் விற்ற பணம் ரூ.200/- அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. அ.சா.1 தனது வாய்மொழி சாட்சியத்தில் கடந்த 17.02.2026 ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியம் மற்றும் தலைமை காவலர் 305 முருகன் ஆகியோர் மதுவிலக்கு வேட்டையாக ரோந்து பணிக்காக மதுராந்தகம் காந்தி நகர், வன்னியர்பேட்டை, ஆகிய இடங்களை கண்காணித்து விட்டு பின்னர் மொறப்பாக்கம் சென்றபோது ஆஜர் எதிரி பச்சையம்மாள் என்பவர் கோணிப் பையில் எதையோ வைத்தருந்தார். அவர் எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தார். அவரை

மடக்கி பிடித்து விசாரித்ததில் அவர் கையில் இருந்த கோணி பையில் 180 Ml அளவு கொண்ட 36 ஓரின் மதுபாட்டில்கள், மற்றும் மது விற்பனை செய்த பணம் ரூ.200/−(100x2) இருந்தது. அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 11.45 மணிக்கு கைது செய்தார். பின்னர் எதிரியிடம் இருந்த மதுபாட்டில்கள் மற்றும் மதுவிற்பனைசெய்த பணம் ரூ.200 ஆகியவற்றை என் முன்னிலையிலும், தலைமை காவலர் முருகன் என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகஜரில் பகல் 12.00 மணியளவில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். பின்னர் எதிரியையும் கைப்பற்றிய பொருளையும் நிலையம் கொண்டுவந்து சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.2 தனது வாய்மொழி சாட்சியத்தில் கடந்த 17.02.2026 ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியம் மற்றும் பெண் காவலர் WC826 கலையரசி ஆகியோர் மதுவிலக்கு வேட்டையாக ரோந்து பணிக்காக மொறப்பாக்கம் சென்றபோது பழைய குற்றவாளியான ஆஜர் எதிரி பச்சையம்மாள் என்பவரின் வீட்டின் அருகே கண்காணித்தபோது அவர் கையில் வெள்ளை நிற கோணிப் பையில் எதையோ வைத்தருந்தார். அவர் எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தார். அவரை பெண் காவலர் உதவியுடன் மடக்கி பிடித்து விசாரித்ததில் அவர் கையில் இருந்த கோணி பையில் 180 Ml அளவு கொண்ட 36 ஓரின் மதுபாட்டில்கள் மற்றும் மது விற்பனை செய்த பணம் ரூ.200/− (100x2) இருந்தது. அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 11.45 மணிக்கு கைது செய்தார். பின்னர் எதிரியிடம் இருந்த மதுபாட்டில்கள் மற்றும் மதுவிற்பனை செய்த பணம் ரூ.200 ஆகியவற்றை என் முன்னிலையிலும், பெண் காவலர் கலையரசி என்பவர் முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகஜரில் பகல் 12.00 மணியளவில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். பின்னர் எதிரியையும் கைப்பற்றிய பொருளையும் நிலையம் கொண்டுவந்து சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.3 இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தன் முதல்

விசாரணையில் ரோந்து பணிக்கு சென்ற போது எதிரியை விசாரணை செய்து வழக்கு சொத்து கைப்பற்றப்பட்ட விவரம் கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

13. இந்த வழக்கை பதிவு செய்தது முதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தது வரை அனைத்துமே காவல் துறையை சேர்ந்த அதிகாரிகள் மட்டுமே சாட்சியாக வந்துள்ளனர். எனவே இந்த வழக்கில் முக்கிய நிகழ்வான 17.02.2026 ம் தேதி எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் தனிப்பட்ட சுதந்திரமான சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்பது தெரிய வருகிறது. எதிரியிடமிருந்து தான் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது என்பதற்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை. இந்த நிலையில் இந்த வழக்கின் எதிரி தான் போலிஸாரை கண்டவுடன் தப்பி ஓடியவரா, எதிரியிடமிருந்து தான் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதா என்பதை முதல்நிலையாக அரசு தரப்பில் தனிப்பட்ட சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

14. இந்த வழக்கை தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்ட அ.சா.3 ம் அவருக்கு கீழே பணிபுரியும் காவலர்களை தவிர வேறு யாரையும் வழக்கு குற்ற சம்பவம் குறித்து சாட்சிகளாக அவர் விசாரிக்காதது, அவரது புலன் விசாரணையின் மீது சந்தேகத்தை ஏற்படுகிறது. இந்நிலையில் விசாரணை அதிகாரி அவருக்கு புள்ளியல் தேவைப்படுவதால் பொய்யான ஒரு வழக்கை ஜோடித்து உருவாக்கியிருக்கிறாரா என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. மேலும் இவ்வழக்கின் எதிரி யாருக்கு சட்டத்திற்கு முரணாக மதுபானத்தை விற்பனை செய்தார் என்பதை பொறுத்து அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் இல்லை. எனவே அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களின் சாட்சியத்திலிருந்து எதிரி மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி எதிரி இந்த வழக்கின் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. முடிவில் எதிரி சட்டபிரிவு 4(1)(a) TNP Act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை பிரிவு 278(1) of BNSS ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16. இவ்வழக்கில் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட பி.ஐ.29/2026 ன் படியான VORION பிராந்தி பாட்டில்கள்–36 ல் உள்ள மதுவை கொட்டி அளிக்கவும், பின்பு அந்த காலி மதுபாட்டில்களையும், மதுபானம் விற்ற பணம் ரூ.200/–ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

17. எதிரியின் பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் நாள் திங்கள்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA
Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.07.27 10:47:05 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மதுராந்தகம்.

<u>**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:–**</u>

| List of Witness | Name of the Witness | Description |
|---|---|---|
| PW1 | கலையரசி க/பெ.சேகர் | Seizure Mahazar |
| PW2 | முருகன் த/பெ.கிருஷ்ணன் | Seizure Mahazar |
| PW3 | பாலசுப்பிரமணியன்/காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் | Investigation Officer |

<u>**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் விபரம்:–**</u>

| Exhibit No. | Description of the Exhibits | Proved by/ Attested by |
|---|---|---|
| Ex.P.1 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1 ன் 1 வது கையொப்பம் | PW-1 |
| Ex.P.2 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2 ன் 2 வது | PW-3 |

| | | |
|---|---|---|
| | கையொப்பம் | |
| Ex.P.3 | கைப்பற்றுதல் மசகர் | |
| Ex.P.4 | முதல் தகவல் அறிக்கை | |

**அரசு தரப்பு சான்று பொருள். 1 :- 36 மதுபாட்டில்கள்**

**அரசு தரப்பு சான்று பொருள். 12 :- ரூ.200/- பணம்**

எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை.

எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை.

எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை.

VALLIAMMA
Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.07.27 10:47:14 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மதுராந்தகம்.

**CC 414/2025**

**27.07.2026**

எதிரி ஆஜர். தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரி பிரிவுகள் 4(1)(a) TNP Act –ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 பிரிவு 278(1)ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**JM No.I/MKM**